# செந்தமிழ்

தொகுதி 90 மார்ச்சு - 96 பகுதி 3

திங்கள் இதழ்



## வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரின் 130 ஆம் பிறந்த நாள் மலர்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேரறிஞர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்.டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

**பேரறிஞர் தமிழண்ணல்,**
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

**பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி,**
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

**பேரறிஞர் பழநி. அரங்கசாமி,**
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

**பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி,**
செந்தில், தாமுநகர், கோயம்புத்தூர்

**பேரறிஞர் ச. மெய்யப்பன்,**
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

**பேரறிஞர் சி. கதிர் மகாதேவன்,**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

**பேரறிஞர் கு. துரைராசு,**
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**பேரறிஞர் அ.அ. மணவாளன்,**
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

**பேரறிஞர் க.ப. அறவாணன்,**
மத்திய பல்கலைக் கழகம், புதுவை.

**பேரறிஞர் சூ. இன்னாசி,**
கிறித்துவத் தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

**பெரும்புலவர் இரா. இளங்குமரன்,**
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி

**பேரறிஞர் சி. மா. இராசேந்திரன்,**
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**பெரும்புலவர் நா. பொன்னப்பன்,**
மதுரைக் கல்லூரி, மதுரை.

**பேரறிஞர் திருமதி. பத்மா சீனிவாசன்,**
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பலகலைக் கழகம்

**பேரறிஞர் நா.ந. மாணிக்கம்**
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை

**பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

**பேரறிஞர் எஸ்.எம். கமால்,**
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

**பேரறிஞர் இரா. கோதண்டபாணி,**
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

## பொருளடக்கம்


பக்கம்

1. காவடிச் சிந்து — 81
பாண்டித்துரைத் தேவர்

2. கவிவடிப்போம் கனிந்து — 93
கவிஞர். அதலை இராமன்

3. எல்லோர்க்கும் தொல்காப்பியம் — 96
பேரறிஞர். நா. பாலுசாமி

4. அபிராமி அந்தாதி — 101
மொழிபெயர்ப்பு - பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி

5. திருமாளிகைத்தேவர் — 107
பேரறிஞர் வ. குருநாதன்

6. திருக்கடைக் காப்பு — 114
பேரறிஞர். வா.கோ. கிருட்டிணமூர்த்தி

7. தமிழர் தம் ஆங்கிலச் சார்பு-வேரும் விழுதும் — 121
பேரறிஞர். க. முத்தையா


## இதழ் கட்டணம்

ஆண்டுக் கட்டணம் ரூ. 50.00

வாணாள் கட்டணம் ரூ.400.00

### அயல்நாடு

ஆண்டுக் கட்டணம் ரூ. 125.00

வாணாள் கட்டணம் ரூ.600.00

குறிப்பு :

சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்களின் காவடிச் சிந்தைப் போல எந்தத் தமிழ்ப் புலவரும் பாட இயலாது என்று பலர் கூற அதுகேட்ட தேவரவர்கள், "திருவருள் உளதேல், அதனினும் சிறக்கப்பாடுதல் கூடாததன்று" எனக் கூறித் தம் முன்னோர்களால் கடவுள் மங்கலம் செய்யப் பெற்ற, சிவஞானபுரத்து முருகப் பொருமான் மீது பாடிய காவடிச் சிந்து.

# பாண்டித்துரைத் தேவர் பாடிய காவடிச் சிந்து

## விநாயகர் துதி

மதியைப் பழித்ததிரு வதனக் கொடிச்சி தரு
மகளைத் தழுவி மகிழ் கொண்டவன் - பத
யுகளத் தெனது துயர் விண்டவன் - ஆறு
மாதர் முன்பரிவால் வழங்குப யோதரஞ் சொரி பாலருந்திய
மண மெத்தவே கமழ் செவ் வாயவன் - சர
வணநற்றடத்து வளர் சேயவன்

துதியைப் புரியுமன்பர் கதியைப் பெறவு மின்ப
சுக மிக்கு தவ வந்த மேலவன் - இருள்
உகமெய்க்க திர் வழங்கு வேலவன் - பண்ணை
சூழ்வருஞ் சிவ ஞானமா புரி வாழ்ந்தருங்குக னான
[வேள்விழி
சுரக்குங் கருணை நன்று கூடவே - சுவை
பரக்குந் தமிழிற் சிந்து பாடவே

நறைமிக்கெழு பொற் கொன்றைத் தொடையைப் புனிதக்
[கங்கை

நதியைப்ப ணியைக் கொண்ட வேணியார் - சிரம்

விதியைத்து ணியக் கண்ட பாணியார் - என்றும்

நாடியும்பர்களோ டயன்றுதி பாடமன்றினுள் ஆடுகின்றவர்

நலமிக்க திருமைந்த னாயவன் - மாது

வலைக்கு ளமுகந்த தூயவன்

மறையிற் புகழ் சிறந்த கதையைப் பெரிய தங்க

மலையிற்றனி வரைந்த செங்கையான் - முடித்

தலையிற்பொ லிவுதந்த கங்கையான் - குற

மானனாளுறை ஏனலா ரகல் கானிலே மத யானையாகி

வருபொற்சர ணங்களைப் போற்றியே - அன்பு[முன்]

மருவித்தொ ழுவன் பணி யாற்றியே. (க)

## முருகக் கடவுள் துதி

நஞ்சார் திருக்களத்துப் பஞ்சான னத்தவர்க்கு

நனிமகிழ் வைத்தரு தனையனெனத் திகழ் நாதனே-
[நாளும்

புனித மனத்தவ ரினிது வழுத்திய போதனே.

அஞ்சா விறற்புயக்ர வுஞ்சாசுரச் சழக்கன்

அடலொழியத் தனி சுடரயிலைத் தொடு மய்யனே -
அகல்

கடலுலகிற்பல இடர்களொழித் தருள் செய்யனே.

பண்ணார் மொழிக் குறத்தி கண்ணாசை மெத்த வைத்துப்
பரவு புனத்திடை யிரவு தனிற்றிரி பாதனே-குளிர்
சரவணநற்பெயர் விரவு தடத்தெழு நீதனே.
எண்ணாதிழித் துரைக்கும் நண்ணார் குலத்தை முற்ற
இகல்வித் தெம நகரி புகுத்திய ஈசனே-என்றும்
புகழ்புரி பத்தர்தம் அகமருவித் திகழ் நேசனே!

வண்டார் செழுங்கடம்பின் தண்டார் புனைந் திலங்கும்
மருவு தடங்கிரி யொருபனி ரண்டெனும் வாகனே-உயர்
சுரபதி தந்திடு தெரிவை மகிழ்ந்தணை யேகனே!
மண்டாசை யாலுடலம் கொண்டாழி சூழுலகில்
மதியழி வாருயர் கதிபெற மேவுகு மாரனே-செந்திற்
பதியிடை வானர் துதிசெய வாழ்வுறு தீரனே.

பாலாழியிற் றுயிலும் மாலானவர்க் கினிய
பரிவு மிகுத்திடு மருகனெனந் தகு பண்பனே-அயன்
தெரிய மறைப்பொருள் விரிய வுரைத்தருள் நண்பனே
வேலா மலைக்குமரி பாலா தமிழ்க் கருள்செய்
மீனுலவுங் குளிர் வானதி தந்திடு மெய்யனே- புகழ்
வானளவுஞ் சிவ ஞான புரந்திகழ் துய்யனே (உ)

## பெரும்பேராசான் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யரவர்கட்குத் தேவர்பிரான் விடுத்த செய்யுள் மடல் :

திங்கள் புரையும் திருவதனச் செவ்வியொரு
பங்கினமர் பெம்மான் பதமலரே - துங்க
முடிக்கணியாத் தாங்கி முதுபரவை வேலிப்
படிக்கணிய என்றும் பலநூலை - வடிக்கும்
உளத்தார்க் கொருநிதியா யோங்கு புகழ்மேய
வளத்தா லுயர்குடந்தை மன்னித் - துளக்கரிய
நேமிநா தன்மருகி நேயமனையா ளொடுவாழ்
சாமிநா தைய தகுநண்ப - மாமுகவை
மன்னியபாண் டித்துரைபல் வந்தனஞ்செய் தின்றெழுதும்
நன்னிருப மீதாம் ....................................
காமாரி தந்தவிளங் காதனே ராய்த் தமிழின்
மாமாரி பெய்துலகை வாழ்விப்போய்
பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்தெரிவோ ரென்றவுண்மை நாடி - முயன்றிது போ.
தைந்நூறு ரூபா வனுப்பினனஃ. தேற்றருள்வாய்
மெய்ந்நூ றுரீஇயொழுகும் வித்தகா - மைந்நூறி
ஆமாலை யிற்சுவையுண் டாக்கும் புறப்பொருள்வெண்
பாமாலை அச்சிற் பதிவுசெயும் - மாமுயற்சி
ஊறிகந்து முற்ற லுறுவிப்பா னோங்குகவான்
ஆறுகந்த சென்னி யருள்.

குறிப்பு : (புறப்பொருள் வெண்பாமாலையின் பதிப்பிற்காக உ.வே. சாமிநாதையர்க்கு ஐநூறு ரூபாய்க்கு உண்டியல் அனுப்பிய போது *(17-12-1894)* எழுதிய செய்யுட் கடிதம்)

உ.வே.சா, என் சரித்திரம், *1950*, பக்கம் *1001*.

# எந்நாடு சென்றனையோ!

"என்னாவி உளங்குளிர அண்ணாவென்(று)
அன்பொடினி எனையார் சொல்வார்?
மன்னாமன் னாமன்னா என யாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்?
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த தேவே!
எந்நாடு சென்றனையோ எங்கள் குல
மணிவிளக்கே இசைத்தி டாயே"

"பண்புலவு தமிழ்ச் சங்கம் நிறுவல்கரு
தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்(று)
எனக்கிசைத்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான் போய்
விண்புலவ ரோடுதம னியங் கொணர
நினைந்தனையோ வேந்த ரேறே"

(மன்னர் பாற்கரசேதுபதி மறைந்த போது பாண்டித்துரைத் தேவரின் கண்ணீரஞ்சலி)

# சங்கம் நிறுவிய துங்கனுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புகழ்மாலை

இனியுமோர் தமிழ்ச்சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை!
(இனியுமோர் தமிழ்ச்சங்கம்)

வியந்தது வையம் சென்ற நாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே;
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே!
(இனியுமோர் தமிழ்ச்சங்கம்)

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பலதமி ழிலக்கிய மாசு துடைத்தான்
பாண்டித்துரைத் தேவன் புகழ்க்கொடி எடுத்தான்!
(இனியுமோர் தமிழ்ச்சங்கம்)

*பாவேந்தர் பாரதிதாசன் - தேனருவி*

*பக்கம் 48-49*

**நாகூர் மகாவித்துவான் குலாம் காதிறு நாவலர் அவர்கள் இயற்றிய மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப் படையில் வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**

பெரும்புலவர் மருங்கமர
மண்டுடுவில் வெண்டிங்களும்
தரங்காட்டி யரங்கேறிய
பயில்சிறப்புப் பெயரெய்திய
அறப்பரிசிலுறக் கொள்ளிய

நிலை பயிலுங் கலை பயிலிய
தவமலியு மவர் நடுவண்
கருங்கடலிற் செஞ்ஞாயிறும்
பொரத்தலைமை கொளத்தவிசில்
விரைப்பாண்டித் துரைத்தேவன்

ஆற்றல்சால் சிறப்பு னாங்கவீற் றிருக்கும்
காட்சி கண்டனிர் களித்தனி ரண்மின்
மாட்சியி னவனே மலர்ந்த முகத்தினன்
யாரை நீயிரென வினாவு மோரையில்
போந்தனென் பெருமநின் னவைக்கள மோர்ந்தெனின்

வருகெனத் தழீஇ யிருக்கென வருகிரீஇப்
போற்றினிர் சென்றநுங் கவியரங் கேற்று
நச்சியாங் கிருக்குந ருளப்பட மெச்சி
வாயரும் புலவன் பெருங்கவி ராயன்
பாவலன் வித்துவா னியறெரி நாவலன்

என்னுயர் பெயர்களு னொன்று நுமக்குக்
களிவர நல்கி யூர்கோ ளொருதலை
மீனிருந் தென்ன வானிற வயிர
மின்செய் தொளிறும் பொன்செய் யாழியும்
பொலந்தகடு குழித்துப் பொற்புற வமைத்த

வலந்த பொற்றொடரின் மாண்பிற் றாகிப்
பழுதறச் சமைந்த பொழுதறி கருவியும்
நொய்ம்மயி ராய்ந்து துய்யென நெய்த
மின்னிவர்ந் தென்ன பொன்னிழை நுழைத்த
மாசுகெடச் சிறந்த காசு மீரமும்

விழுத்தலை யமைந்த கழுத்தள வரையன்
பணயம் பலவு மிணையறத் தரீஇப்
பெருகிய மகிழ்விற் பேணுபு விடுக்கும்
வருகுவிர் மாதோ வளமலி தன்மையிற்
செம்பொன் பழுநிய செழுமரன்
வம்பொடும் பொலிந்து வந்ததா லெனவே.

# அபிதான சிந்தாமணியின் ஆசிரியர் ஆ. சிங்காரவேலு முதலியாரின் புகழுரை.

இந்நூல் இவ்வாறு ஒருவாறு முற்றுப் பெற்ற பின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். 'அவர்கள் இத்தகைய நூல் தமிழிற்கின்றியமையாததே; அதனை வெளியிடுக' என்றனரேயன்றி யதனை யச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

பின்பு யாழ்ப்பாணம் ம.ள.ள. ஸ்ரீ கனகசபைப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்களிடம் இதன் ஒருபாகத்தைக் காட்டினேன். அவர் இஃது அரிய தமிழ்க் கதை அகராதி; இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டுமென ஒரு பத்திரம் எழுதித் தந்தனர். புரொபஸராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் அவர்களிடம் காட்டினேன். அவர் இதனையொப்ப நானும் ஒரு நூல் எழுதிக் கொண்டு வருகிறேன் என்று கூறினரே அன்றி வேறொன்றுங் கூறவில்லை. அவர் கருத்தென்னோ அறியேன். அதற்குப் பின்னிதனைச் சென்னை கியூரேடரும் பச்சையப்பன் கல்விச் சாலைத் தரும விசாரனையின் எடிகேஷனல் டிரஸ்டியுமாகிய பிரம்ம ஸ்ரீ வ.கிருஷ்ணமாசாரியரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக்காரர்களிடம் காட்டி செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறி விடுத்தனர். நான் கூடிய அளவில் உயர்தரக் கல்வி போதிக்க வல்லேனாயினும் ஊழ்வலியால் சென்னை பச்சையப்பன் விசாரனைக்குட்பட்ட பி.டீ. செங்கல்வராய நாயகர், கோவிந்த நாயகர் கலாசாலைகளில் அமர்ந்து செல்வாக்கிலாததால் வருவாய் மட்டாக அச்சிடப் பொருளிலாது இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஒரு அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன். அவர்கள் இது தொடர்ந்த

கதையாயின் வாங்கலாமெனவும், சிலர் முற்றுறப் பல நாள் பிடிக்கும் எனவும் சிலர் கையொப்பமிட்டுஞ் சென்றனர். இச் சோர்வால் எனக்கு அக்கார்யத்தில் ஊக்கஞ் செல்லாது நூலைப் புற்றிடுவோமா என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனை யொத்த சிறு நூல்களியற்றினர். அதனைக் கண்டும் திருவுளப்பாங் கென்றிருந்தேன். இது நிற்க, நான் வழிபடு கடவுளாகிய மலை மகணாயகர் உள்ளக் குறிப்போ, அல்லது நான் முதன் முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ அல்லது இரண்டாமுறை வெளிப்படுத்திய அறிக்கையோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமி தேவரவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல்பவருமாகிய ஸ்ரீமான். பொ. பாண்டித் துரைசாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சுயந்திர சாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தும் பலரைக் கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திர சாலையில் என் முன்னிலையில் அச்சிட வுத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந்தனர். அவர்கள் அருஞ் செயலை இப் புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்.

**அபிதான சிந்தாமணி**

முதற்பதிப்பின் முகவுரை

17-2-1899

# பிணிதீர்த்த பெருந்தகைக்குப் பெரும் புலவர் அரசஞ்சண்முகனாரின் நன்றியுரை

"நோய்முற்றி வயிற்றினுள் நாபியின் கீழ்க் கழலை யொப்பத்திரண்டு இரு மலமும் வெளிப்படாவண்ணம் தடுத்து ஆவி போக்க முயன்றது. அக்காலைப் பல சுதேச மருத்துவரிடத்தும் பல ஆங்கில மருத்துவரிடத்தும் சென்று பிணி தீர்த்துக் காத்தல் வேண்டுமெனப் பெரிதும் வேண்டினேன். அவரெல்லாரும் அந்நோய் கருவி கொண்டு சேதிக்கற் பாற்று என்றும் அதுவும் முற்றியபடியான் இனிச் செய்யின் உயிர்க்கேடு செய்யும் என்றும் சொல்லினர். பின்னர் பிறநாடு சென்றாயினும் பிணி தீர்ப்பான் கருதி, யான் அக்காலைச் சேதுபதி கலா சாலையிற் கற்பிக்குந் தொழில் பெற்றிருந்தமையால், மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியும் பாலவனத்தம் ஜமீந்தாரும் உத்தமகுணமேருவும் வறியார்க் கொன்றீவதே ஈகையெனக் கொண்ட பெருவள்ளலுமாகிய மகா -ள-ள-ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்களைக் கண்டு நடந்தன வுரைத்தேன், உடனே அவர்கள் கலாசாலையில் யான் பெற்று வந்த ஊதியத்தை ஓராண்டு வரை வேலையின்றிப் பெறுமாறு ஆணை செய்தளித்த-தூஉம் அன்றி இரு நூறு வெண்பொற்காசும் பரிசிலாக அளித்தார்கள். அவர்கள் செய்த பேருதவியை யான் என்றும் மறவேன்"

**அரசஞ்சண்முகனாரின்**

(தொல்காப்பியப் பாயிர விருத்தியின் நன்றியுரை)

# செந்தமிழ் பற்றி வையாபுரியாரின் பொய்யாவுரை :

"தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையினும் அதுவரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டே இருந்தன. பத்திராதிபர் எழுதியன வெல்லாம் தமிழ் மணமும் ஆராய்ச்சி நலமும் செறிந்து விளங்கின; கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைந்தன; ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாய் இருந்தார்கள். தமிழ் நாட்டுப் பெரும் பேராசிரியனாய் அமைந்து தமிழ் மக்கள் வீடு தோறுஞ் சென்று தமிழ்க் கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்து வந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாய் இருந்தது"

(ஆராய்ச்சித் தொகுதி - பேரா. வையாபுரிப்பிள்ளை - முகவுரை)

# கவிவடிப்போம் கனிந்து

- கவிஞர். அதலை இராமன்

(நேரிசை வெண்பா)

1. நான்காம் தமிழ்ச்சங்கம் நன்றா யமைந்திடச்
சான்றோரைக் கூட்டிச் சமன்செய்த - மன்னராம்
பாண்டித் துரைத்தேவர் பண்பினைப் பாராட்டி
ஈண்டு மகிழ்வோ மினிது!

2. நான்மாடக் கூடல் நலமார் மதுரையில்
தேனார் தமிழ்வளர்த்த திண்ணியன் - வானார்
பாண்டித் துரைத்தேவர் பாரோங்கு பண்பினை
யாண்டும் புகழ்வோ மினிது!

3. உண்டி, உறையுள், உடைகளும் தேவரவர்
கொண்டிங் குவந்து கொடுத்திட்டார் - தண்டமிழ்ப்
பாடம் பயின்றே பயன்பெறு வோர்க்கெலாம்;
பாடிப் பணிவோம் பதம்!

4. நாரை பறக்காத நாற்பத்தி யெட்டுமடை
சீர்மைசால் கண்மாய் செழித்திருக்கும் - ஊர்வளர்
பாண்டித் துரைத்தேவர் பாங்கினைப் பாராட்டி
நீண்ட கவிவடிப்போம் நின்று!

5. பாண்டித் துரைபோன்ற பைந்தமிழ் வித்தகர்
ஈண்டிலை யென்றால் இலங்குமோ - தண்டமிழ்?
மாண்புடைச் சான்றோர் மதிநலப் பண்பினை
யாண்டும் மறந்திலோம் யாம்!

## எண்சீர் விருத்தம்

1. சீரோங்கு திருநாடாம் முகவை தன்னில்
செல்வவளச் செழிப்புடனே திகழ்ந்து வந்த
பாரோங்கு நற்குடியாம் மறவர் வீரப்
பண்புநிறைக் குலமதிலே பிறந்த மன்னன்;
காரோங்கு முகிலனைய கருணை வள்ளல்;
கனித்தமிழில் பற்றுடைய அறிவி னூற்று;
தாரோங்கு தோளுடைய வெற்றி வீரன்;
தன்மானம் மிக்கோங்கு மறவர் சிங்கம்!

2. பாண்டித்து ரைத்தேவ ரென்னும் தூய
பைந்தமிழில் பெயர் கொண்ட வீர வேந்தன்;
தூண்டியெழும் உணர்வோங்கு தொண்டி னாலே
துவளாது தமிழ் வளர்த்த துணிவுக் காரர்;
வேண்டியதை வேண்டுவோர்க்கு வழங்கி அன்னார்
விருப்பத்தை நிறைவேற்றும் காள மேகம்;
ஆண்டுநமை மகிழ்வித்த அன்னை உள்ளம்;
அணையாத ஒளிவீசும் ஞான தீபம்!

3. செம்புலமை மிக்கோங்கு திறத்தி னாலே
சீர்தூக்கிப் பார்த்தாய்ந்தே. தமிழைக் காக்க
கம்பர்.திரு வள்ளுவரே கதியா மென்று
கணித்துரைத்த மாமேதை தேவர் மன்னன்!
தம்பொருளைச் செலவிட்டே தமிழைக் கற்க,
தக்காரை ஊக்குவித்தே மகிழ்ந்த மாறன்;
அம்மம்ம! இவர்பெருமை கூற எண்ணின்
ஆதவனின் சுடர்போலே மிகவே நீளும்!

4. வானத்தே மித்ந்துவரும் நிலவோ? இல்லை
வயல்களிலே விளைந்திட்ட கதிரோ? இல்லை
தேன்தனிலே உறைந்திட்ட சுவையோ? இல்லை
தீங்கரும்பில் பிழிந்திட்ட சாறோ? இல்லை
கானத்தை இசைக்கின்ற குயிலோ? இல்லை
கண்டாடும் கலாபமுடை மயிலோ? இல்லை
வானமுத நற்சிறப்போ இவரின் பண்பு?
வரலாற்றுப் பெட்டகமோ தேவர் தானே?

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

### (சொல் - கிளவியாக்கம்)

**- பேரறிஞர் நா. பாலுசாமி**

(முன் இதழ்த் தொடர்ச்சி)

**சூத்திரம் - 35**

**இல்லை எனச் சொல்லும் முறை**
**எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின்**
**அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்**

(ப.ரை) எப்பொருள் ஆயினும் - எந்த ஒரு பொருளையாவது, அல்லது இல் எனின் - (ஒருவன்) 'அல்லது இல்' என்னும் வாய்பாட்டால் (முறையால்) இல்லை எனக் கூறவேண்டுமாயின், அப்பொருள் அல்லா - கேட்கப்பட்ட அந்தப் பொருளை விடுத்து, பிறிது பொருள் - தன்னிடம் உள்ள மற்றொரு பொருள் மேல் வைத்து, கூறல் - கூறுக,

ஒருவன் தன்னிடம் வந்து ஏதேனும் ஒரு பொருளைக் கேட்டால், தான் தன்னிடம் உள்ள அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைச் சொல்லி, அதுவல்லது இல்லை என்று கூறல் வேண்டும் என்பது இச்சூத்திரத்தின் திரண்ட பொருள்.

(வி.ரை) அல்லதுஇல் - இத்தொடர் ஒருவகை வாய்பாடாகும்; உத்தி அல்லது முறையாகும். பிறிது பொருள் - கேட்ட பொருளுக்குத் தொடர்பான மற்றொரு பொருள். கூறல் -கூறுக; இது அவ்விகுதி பெற்ற வியங்கோள் உடன்பாட்டு வினைமுற்று.

(எ.டு) ஒருவன் ஒரு கடைக்குச் சென்று பாசிப்பயறு இருக்கிறதா என்று கேட்டால், அக்கடைக்காரன் அது உண்டு அல்லது இல்லை என்று நேரான பதில் கூறவேண்டும். ஆனால் அவ்வாறு கூறாமல் தன் கடையில் உள்ள உழுந்தைச் சுட்டிக் காட்டி, உழுந்து அல்லது இல்லை என்று கூற வேண்டும். இது சுற்றி வளைத்துச் சொல்லும் விடையாகத் தோன்றும். ஆனால் அவ்வாறு சொல்லவேண்டும் என்று

விதிக்கிறது இச்சூத்திரம். இவ்வகைப் பதிலால் அவன் கேட்டது இல்லை என்பது மறைமுகமாக உணர்த்தப்படுவ தோடு தன்னிடம் பயறு இனத்தைச் சார்ந்த உழுந்து உள்ளது என்ற உண்மையையும் உணர்த்திவிட முடியும். இவ்வாறு கூறுவது ஒரு வகை உபாயம்; உத்தி.

## சூத்திரம் - 36

**அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்**

(ப.ரை) அப்பொருள் - கேட்ட அந்தப் பொருளையே, கூறின் - இருக்கிறது எனக் கூறவேண்டின், சுட்டி - கேட்கப்பட்ட அந்தப் பொருளையே குறித்து, கூறல் - கூறுக,

கடைக்கு வந்தவன் கேட்ட பொருள் தன்னிடம் இருக்குமாயின், அவன் கேட்ட அந்தப் பொருளின் பெயரைக் கூறி இருக்கிறது அல்லது இல்லை எனக் கூறுக என்பது இதன் பொருள்.

(வி.ரை) சுட்டுதல் - விளக்கமாக எடுத்துக் கூறல்

(எ.டு) பாசிப்பயறு உள்ளதா என்று ஒருவன் கேட்டால், அப்பொருள் தன்னிடம் இருப்பின் நேராகவே பாசிப்பயறு இருக்கிறது என்று கூறல் வேண்டும். முன் கூறியது போல் உழுந்தல்லது இல்லை எனக் கூறவேண்டா. முன் சூத்திரமும் இச்சூத்திரமும் குறிக்கும் பொருள் ஒன்றே; ஆயின் கூறும் முறை (உத்தி) வேறுபட்டது. அவ்வளவே.

## சூத்திரம் - 37

**பொருளும் சுட்டும்**

**பொருளொடு புணராச் சுட்டுப் பெயர் ஆயினும்**
**பொருள்வேறு படாஅது ஒன்றா கும்மே**

(ப.ரை) பொருளோடு - பொருட் பெயரோடு, புணரா - சேர்ந்து வராத, சுட்டுப் பெயர் ஆயினும் - சுட்டுப் பெயராக நின்றாலும், பொருள் வேறுபடாது - சுட்டுப் பொருள் மாறாமல், ஒன்றாகும் - ஒரு பொருளையே குறிக்கும்.

(வி.ரை) சுட்டுப் பெயராவது யாதானும் ஒரு பொருளின் பெயரைச் சுட்டுவது. பொருள் என்பது யாதானும் ஒரு

பொருளின் பெயர். சுட்டிக் கூறுவது சுட்டுப் பெயர்; சுட்டப்படுவது பொருட் பெயர் என அறிக.

(எ.டு) அவ்வீடு, இவ்வூர் - இவ்வாறு வருவன பொருளோடு சேர்ந்து வரும் சுட்டுப் பெயர்கள்; அது, இது - இவ்வாறு தனித்து நிற்பன பொருளொடு சேர்ந்து வாராத சுட்டுப் பெயர்கள். அ,இ- சுட்டெழுத்துக்கள். வீடு, ஊர் என்பன பொருள்களின் பெயர்கள். அதாவது, முருகன் வந்தான்; அவன் நல்லவன். இளங்கோ ஒரு துறவி; அவர் சிலப்பதிகாரம் அருளினார். இவ்வாக்கியங்களில் வரும் அவன், அவர் என்பன சுட்டுப் பெயர்கள். ஆனால் இச்சுட்டுப் பெயர்கள் பொருட் பெயர்களாகிய முருகன், இளங்கோ என்னும் சுட்டுப் பெயர்களோடு சேர்ந்து (புணர்ந்து) வராத சுட்டுகள். ஆயினும் பொருளில் மாற்றம் இல்லை. அவன், அவர் என்னும் சுட்டுகள் முருகன், இளங்கோ என்னும் பொருட் பெயர்களையே குறிக்கும் என்பது காண்க.

## சூத்திரம் - 38

### சுட்டு வரும் இடம்

**இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும்**
**வினைக்கொருங்கு இயலும் காலம் தோன்றின்**
**சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்**
**இயற்பெயர் வழிய என்மனார் புலவர்**

(ப.ரை) இயற் பெயர்க் கிளவியும் - இயல்பான பெயரைக் குறிக்கும் சொல்லும், சுட்டுப் பெயர்க் கிளவியும் - ஒரு பொருளைச் சுட்டி நிற்கும் சொல்லும், வினைக்கு ஒருங்கு இயலும் - காலம் தோன்றின் - பயனிலையாகிய வினை முற்றைக் கொள்ளும் போது, சுட்டுப் பெயர்க் கிளவி - சுட்டிச் சொல்லும் சொல்லை, முற்படக் கிளவார் - இயற் பெயருக்கு முன்னர் வைத்துக் கூறார், இயற்பெயர் வழிய - இயற்பெயரின் பின்னர் வரும் அச்சுட்டுச் சொல், என்மனார் புலவர் - என்று கூறுவர் இலக்கண நூலார்.

ஒரு இடுகுறி அல்லது இயற்பெயரும் அதனைச் சுட்டி வரும் சுட்டுப் பெயரும். ஒரு பொருளின் மேல் வைத்து வினை முற்றாகிய பயனிலையை ஏற்கும் போது, சுட்டுப்

பெயர்ச் சொல்லை இயற்பெயருக்குப் பின்னரே கூறல் வேண்டும் என்கிறது இச்சூத்திரம்.

(வி.ரை) கிளவி - சொல், ஒருங்கு இயலுதல் - ஒருபொருளாக நின்று ஒரு வினைமுற்றைக் கொள்ளுதல். வழிய - பின் வருபவை, பன்மை குறித்த வினைமுற்று. எனவே, சொல் எனவருமிடத்தே சொற்கள் எனப் பன்மைப் பெயர் களாகக் கொள்ளல் வேண்டும். என்மனார் - என் + மன் + ஆர் என்பர் என்பது பொருள். மன் - இடைநிலை; என்பர் என்பது என்மனார் என வந்தது.

(எ.டு) இராமன் அவன் வந்தான்; புலி அது பாய்ந்தது. இவ்வாறு அவன், அது எனும் சுட்டுப் பெயர்கள், இராமன், புலி என்னும் இயற்பெயர்களுக்குப் பின்னர் நின்று ஒரு வினை முற்றைக் கொண்டன. இவ்வாறன்றி, இராமன் வந்தான்; அவன் அருளினான்; புலி எழுந்தது; அது பாய்ந்தது எனக் கூறின், சுட்டுப் பெயரும் இயற்பெயரும் ஒருங்கு இயங்காமல் தனித்தனியே நின்று, தனித் தனி வினை முற்றைக் கொண்டன. இங்கும் சுட்டுப் பெயர்கள் இயற் பெயர்களுக்குப் பின்னரே வந்தவாறு காணலாம்.

## சூத்திரம் - 39

விதி விலக்கு

**முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே**

(ப.ரை) முற்படக் கிளத்தல் - சுட்டுப் பெயரை இயற் பெயருக்கு முன்னர் நிறுத்திக் கூறுதல், செய்யுளுள் உரித்து - செய்யுளில் அமையும்.

இயற்பெயரும் சுட்டுப் பெயரும் வரும் போது, சுட்டுப் பெயரை இயற்பெயருக்குப் பின்னால் கூறுவ்து கவிதைக்குப் பொருந்தும்.

(வி.ரை) முன்சூத்திரத்தில் சுட்டுப் பெயர் இயற்பெயருக்குப் பின்னரே வருதல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இச்சூத்திரத்தில் செய்யுளில் மட்டும் இயற்பெயருக்கு முன்னரும் வரலாம் என ஒரு விதிவிலக்கு அளிக்கப் ப்டுகிறது. உரை நடையில் முன்னர் வருதல் கூடாது என்பது பெறப்படும்.

(எ.டு) "அவன் அணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்"

- இந்தச் செய்யுள் அடியில் வேலன் என்பது இயற்பெயர்; அவன் என்பது சுட்டுப் பெயர். செய்யுளாகையால் வேலன் என்ற இயற்பெயருக்கு முன்னர் அவன் என்னும் சுட்டுப் பெயர் வந்தது. (அணங்கு செய்தல் - வருத்துதல்; ஆயிழை - ஆராய்ந்தெடுக்கப்பட்ட வளையலை அணிந்த வளே; அண்மை விளி)

## சூத்திரம் - 40

**சுட்டு முதல் ஆகிய காரணக் கிளவியும்**
**சுட்டுப் பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்**

(ப.ரை) சுட்டு - சுட்டெழுத்தை, முதல் ஆகிய - முதலில் பெற்று வரும், காரணக் கிளவியும் - காரணத்தை உணர்த்தும் சொல்லும், சுட்டுப் பெயர் இயற்கையின் - சுட்டுப் பெயரினது இயல்பைப் பெற்று, செறியத் தோன்றும் - இயற்பெயருக்குப் பின்னர் பொருந்தி வரும்.

காரணத்தை உணர்த்தும் சுட்டுச் சொல்லும் முற் கூறிய சுட்டுப் பெயரைப் போன்றே இயற்பெயருக்குப் பின்னரே வரும் என்பது இதன் பொருள்.

(வி.ரை) சுட்டு - அ,இ, என்னும் சுட்டெழுத்துக்கள்; 'உ' என்னும் சுட்டெழுத்து இப்போது நடைமுறையில் இல்லை. எனவே அது விடுக்கப்பட்டது. அது, இது என்பன சுட்டுப் பெயர்கள் 'உது' என்னும் சுட்டுப் பெயர் இப்போது வழக்கில் இல்லை. அது, இது என்பன 'ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபினை ஏற்று அதனால், இதனால் (அன்சாரியை) எனக் காரணம் சுட்டி வரும் போது இயற்பெயர்க்குப் பின்னரே வரும் என்பது அறிக.

(எடு) மகன் வந்தான், அதனால் தந்தை மகிழ்ந்தான்; போர் மூண்டது, அதனால் வீரர் எழுந்தனர். இங்கு அதனால் என்னும் காரணம் பற்றிய சுட்டுச் சொல் தந்தை என்னும் இயற்பெயருக்குப் பின்னர் வந்தமை காண்க. இவ்வாறே 'இதனால்' என்பதற்கும் கண்டு கொள்க. இவ்விடத்தில் சுட்டப்படும் பொருள் தனிமொழியாக நிற்காமல் தொடர் மொழியாகவே வரும் என்பது அறிக.

- (தொடரும்)

# அபிராமி அந்தாதி

## ABIRAMI ANTHATHI

மொழிபெயர்ப்பு : அ. தட்சிணாமூர்த்தி

கண்ணிய துன்புகழ் கற்பதுன்னாமம் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம்புயத்தில் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேது என் அம்மே புவியேழையும் பூத்தவளே!

Oh maker of the sevenfold world!
Oh my Mother beloved! It is Thy glory
That I ever contemplate; it is Thy sacred name
That I ever chant; my heart melts
Out of love for Thy lotus - feet!
It is in the assembly of Thy servitors
Who at all times worship Thee
That I take delight night and day!
What tapas have I performed for all these! (12)

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தனுக்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே!

Thou art the maker of the fourteenfold world!
Thou art the sustainer and the destroyer of them too!
Thou art more ancient than the Lord
Whose throat is venom - stained!

Thou art the Younger sister of Lord Vishnu
Who is unaging; Thou art the great One
Who cannot be comprehended but by tapas!
As such, Should one worship another deity? (13)

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்,
சிந்திப்பவர் நற்றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரிலுன்னைச்
சிந்திப்பவர்க் கெளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே!

Thou art the spouse of our Lord,
Whom all the Asuras and the Celestials worship alike;
Narayana and Brahma also contemplate Thee!
The Yogins, who are invested with the enternal brahmanandha
Bind Thee to their hearts;
But Thy boundless grace is easily attained
By all those who once see you on this terrestrial world! (14)

தண்ணளிக் கென்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடு மன்றோ?
பண்ணளிக்கும் சொல்பரிமள யாமளைப் பைங்கிளியே!

Parakeet uttering melodious words!
The one of boundless grace! Yamala!
Is the lordship of this earth, so a fitting reward

For those who, in their former births performed
Tapas in crores to attain Thy grace?
Nay, it is the lordship of the heaven and the eternal
moksha ! (15)

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே. ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்கள் ஆகிவிரிந்த அம்மே!
அளியேன் அறிவள விற்கள்வான ததிசயமே!

Parrot-like Mother! Effulgent light
Glowing into the hearts of devotees!
The source of that effulgence!
The empty space! The mother unfolding Thyself
As the five great Elements!
It is a wonder that Thou presented Thyself
To the limited knowledge of this humble soul! (16)

அதிசய மான வடிவுடையாள் அரவிந்த மெல்லாம்
துதிசெய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமான தபசயமாக முன்பார்த்தவர் தம்
மதிசய மாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே!

Oh Abirami of marvellous form!
The Comely liana, endowed with the Visage
Which is adored by every lotus flower!
Once Lord Shiva, Thy spouse, with the glance of His eye
On His forehead, foiled the attempts

Of Rathi's spouse and triumphed over him!
Is it to triumph over that Lord's wisdom
That you have now taken His left half for Thyself? (17)

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை யாண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளி நிற்கவே!

Oh Mother! your sacred feet made me your servent
After cleansing my heart of the stain of jealousy!
May you appear before me
In the blissful company of your spouse
Whose left half you've taken for Thyself -
Both of you in your Wedding suits
When the cruel god of death
Approaches me to take my life off! (18)

வெளிநின்றநின் திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது; என்ன திருவுள்ளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே!

Oh Mother abiding in the glowing navagonas!
The sight of Thy sacred form in the space
Has caused my eyes and heart overflow with ecstasy!
Clear spiritual wisdom glows bright into my heart's interior!
Who knows the secrets of Thy sacred heart? (19)

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்டிங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே!

Oh auspicious Mother and the mountain of boundless love!
Which is Thy holy abode?
Is it the left half of the Lord where you now abide?
Is it the beginning of the fourfold Veda
Which proclaim what is good and what is evil?
Is it the end of those Vedas?
Is it the silvery and nectarine moon?
Is it my heart or the sea
Where the sun and the moon set? (20)

மங்கலை செங்கலச முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும்பெண்கொடியே!

Abirami, the green liana-like Mother
Is the lady of auspiciousness!
She has a pair of breasts which resemble
A pair of gem-made Kalasas!
She is the daughter of Himavan!
She has roseate hands which are adorned with conch-made bracelets!
She is peacock in Her grace!

She is the ruling deity of all arts!
She occupies the left half of the Lord,
On whose matted hair abides the Ganges of leaping waves!
She is Pingalai, Neeli, Lakshmi and Saraswathi! (21)

(தொடரும்)

# திருமாளிகைத்தேவர்

- பேரறிஞர் வ.குருநாதன்.

'திருவிசைப்பா - திருப்பல்லாண்டு' என்ற ஒன்பதாம் திருமுறை ஆசிரியர் ஒன்பதின்மருள் முதலாமவர் திருமாளிகைத் தேவர். திருவிசைப்பாவில் முதல் நான்கு திருப்பதிகங்களும் இவர் பாடியவை. இவர் வாழ்வும் வாக்கும் பற்றி முறையே காண்போம்.

## மாளிகை மடத்து மன்னிய வாழ்வு

திருமாளிகைத் தேவர் வாழ்வைக் குறித்த நேரிய வரலாறாக எதனையும் அறிய இயலவில்லை. இவருக்கு அமைந்த பெயரும் இயற்பெயராய்த் தோன்றவில்லை. இவர் வாழ்ந்திருக்கக் கூடிய 'திருமாளிகை' என்ற இடச்சார்பினால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் நான்கும் தில்லைத்திருத்தலம் பற்றியனவாய் இருத்தலால். இவரும் அத்தில்லைப் பதியிலேயே வாழ்ந்திருந்தவர் என்று எண்ணலாம். இதற்கேற்பத் தில்லையில், 'மாளிகைமடம்' என்பதொன்று அருந்தவமுனிவர் பலரும் அமர்ந்து அருளறம் புரிதற்கிடமாய்த் தொடர்ந்து பலகாலம் சிறப்புற்றுத் திகழ்ந்ததைப் பார்க்கிறோம்.

வரந்தரும் தொல்லைத் தில்லை மாளிகை மடத்து மன்னும்

அருந்தவ முனிவெண் காடன் அருள்விநா யகன்ம னத்தால்

பரிந்தெனை யாண்டு கொண்ட படர்சடைக் கடவுள் நீதி

திருந்திய பரம ஞான சிவனடி சென்னி சேர்ப்பாம்.

எனவரும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணக் கடவுள் வாழ்த்துப் பாடலில் (23), செல்விநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி, தில்லை மாளிகை மடத்திலிருந்த வெண்காட முனிவரின் அருள் மாணவரார்கிய விநாயக முனிவரைத் தம் அருளாசிரியராகக் குறிப்பிடுகின்றார். இதனால் பெரும்பற்றப் புலியூர்நம்பியின் காலமான கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தில்லையில், 'மாளிகை மடம்' என்ற பெயரோடு திருமடமொன்றும் வழி வழி அருளாளர்களின் ஆட்சியில் சிறந்திருந்தமை விளக்கும். இம் மாளிகை மடத்தின் தலைவரொருவர் வேதாரணியபுராணப் பாயிரத்திலும் திருக்கானப்பேர்ப்புராணப் பாயிரத்திலும் துதிக்கப்

பெற்றுள்ளார். எனவே, இம்மாளிகை மடத்தைத் தோற்றுவித்தவராகவோ இதனைச் சார்ந்து வாழ்ந்தவராகவோ இவ்வாசிரியரை நாம் எண்ணலாம். 'திருப்புலியூர்த் திருமாளிகைத் தேவர்' என்று வேதாரணிய புராணத்தில் அகோரமுனிவரால் இவர் குறிக்கப் பெறுதலும் இங்கே நோக்கத்தகும்.

## வேற்றுச்செய்திகள் : போலிப்புனைவுகள்

இனி, திருமாளிகைத் தேவரென்னும் பெயரோடு இவர் வரலாறென்ற வகையில் இவருக்குப் பொருத்தமும் தகுதியுமில்லாத வேறுபல செய்திகள் புனைந்துரைக்கப் பெற்றுள்ளன. பதினேழாம் நூற்றாண்டில் சாமிநாத முனிவர் பாடிய திருவாவடுதுறைப் புராணத்தின் திருமாளிகைத்தேவர் திறமுரைத்த அத்தியாயத்தில் சிலவும் -பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அவ்வூர் ஆதீனத்தடியராய் வாழ்ந்த தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் திருமாளிகைத் தேவரைக் குறித்துப் பாடிய தோத்திரப் பாடல்களில் சிலவும், செவி வழியில் சிலவுமாய் அறியவரும் செய்திகளை அறிந்தொதுக்க வேண்டுவதும் இங்கே தேவையாகின்றது. அவையாவன :

திருவிடைமருதூரில் சைவ வேளாண்குலத்துப் பரியேறும் பெரியோர் முதலிய ஐந்து கொத்தாருள் சைவராயர் வழித்தோன்றலே திருமாளிகைத் தேவரென்பர். அதற்குத் தக்க ஆதாரமில்லாமையோடு தமிழ்ச் சைவவேளாண் மரபில் இவ்வகையான குடிப்பிரிவை எங்கும் கண்டதில்லை.

நவகோடி சித்தர்புரமென்ற திருவாவடுதுறையில் ஞானயோக சாதனை செய்து மகிழ்ந்திருந்த போகநாதரென்னும் சித்தரிடம் திருமாளிகைத் தேவரும் கருவூர்த் தேவரும் மாணவரா யிருந்தனரெனச் சில செய்திகள் கூறப்படுகின்றன. ஆயின், இந்தப் போகநாதர் திருமறை இலக்கிய வரலாற்றுக் காலங்களில் எங்கும் எப்போதும் அறியவராதவர். மிகப் பிற்காலங்களில், பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மருத்துவம் முதலிய பிறதுறைகளில்தான் போகரென்ற சித்தரைக் காணமுடிகிற தேயொழிய, தமிழ் இலக்கியத்துறையில் எக்காலங்களிலும் போகரை அறியக்கூடவில்லை. ஆதலால், திருமுறையாசிரியர் எவரையும் போகரின் மாணவரென்றல் பொருந்தாது.

திருமாளிகைத்தேவர் சேந்தனாரோடு தில்லைக்குச் சென்று அங்கே திருவீதியுலாவில் ஓடாது தடைபட்டு நின்ற இறைவன் திருத்தேரை வடங்கழற்றிவிட்டுத் தானே ஓடி நிலைசேரும்படித் திருப்பதிகம் பாடினாரென்றும் கூறப்படுகின்றது. இஃது அங்கே மார்கழித் திருவிழாவில் திருப்பல்லாண்டு பாடித் திருத்தேரோட்டிய சேந்தனாரின் செயலுக்கு மாறான போலிப் புனைந்துரையென்பது புலனாகும். இதில் தேரையோட்டியவர் சேந்தனாரேயென்பதைத் தெளிவுறப் புரிந்து கொள்ளாத ஒருவர், சேந்தனாருடன் சென்ற திருமாளிகைத் தேவர் ஓட்டினாரென்று மாட்டிவிட்டிருத்தலும் கூடும். இதுவே திருவீழிமிழலையில் நிகழ்ந்ததாகக் கூறப்படுதலாலும், பொதுவாக இப்புனைந்துரையின் பொய்ம்மையைப் புரிந்து கொள்ளலாம்.

தில்லையிலிருந்து திருவாவடுதுறைக்கு மீண்ட திருமாளிகைத் தேவர் அங்கே எழுந்தருளியிருக்கும் அம்மையப்பரின் மேல் திருவிசைப்பாப் பதிகங்கள் பாடிப் பரவினாரென்றும் தவறான தகவல் தரப்படுகின்றது. இவர் தில்லையைத் தவிர வேறு எப்பதியிலும் திருவிசைப்பாப் பாடவில்லை.

திருமாளிகைத்தேவர் காவிரியில் நீராடிப் பூசைக்குரிய பூவும் நீரும் கொண்டு வருகையில் எதிரே சிலர் பிணந்தூக்கி வந்தாராக, இவர் தமக்கும் தம் பூசைப் பொருள்களுக்கும் தூய்மைக்கேடு - தீட்டு - நேராவண்ணம் அவற்றை விண்ணிலே வீசி நிறுத்திவிட்டு, பிள்ளையாரை வேண்டிப் பிணத்திற்கு உயிரூட்டிச் சுடுகாடு வரை நடப்பித்தாரென்பதும், அவ்வாறே சுடுகாட்டில் எரியும் பிணப்புகையை மணப்புகையாக மாற்றினாரென்பதும், தம் மேல் அந்தணர் பலர் கூறிய கூடாவொழுக்கப் பழிகேட்டு அரசன் தண்டிக்க அழைத்தானாக, இவர் அவனுக்கு மாறான அற்புதங்களை நிகழ்த்தி அவனை அடக்கிப் பணிவித்தாரென்பதும், கொங்கணச்சித்தரின் கமண்டலத்தில் வற்றாத நீரை வற்றச் செய்தாரென்பதும், வெந்த பயற்றஞ்சுண்டலை விதைத்து விளைவித்தாரென்பதும் போன்றவை ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராகிய திருமுறையாசிரியர்க்குப் பெருமை சேர்க்காத வெற்றுப் புனைகதைகளென்றே விடுக்கப்படும்.

ஒருகால், இச்செய்திகளுக்குரிய திருமாளிகைத்தேவர் பிற்காலச் சித்தர்களுள் ஒருவராகலாம். போகநாதசித்தர், கருவூர்ச்சித்தர் போன்றோரும் அக்காலங்களுக்குப் பொருந்துவோராகலாம். ஆயினும், இச்செய்திகளில் பலவும் போலிப் புனைந்துரைகள் என்பதே பொருந்தும்.

# இறைவனை ஏத்திய இசைப்பா வாக்கு

மேலே குறிப்பிட்டவாறு திருமாளிகைத் தேவர் பாடிய நான்கு திருப்பதிகங்கள் திருவிசைப்பாவின் தொடக்கத்திலேயே அமைந்துள்ளன. அவற்றுள் முதல் திருப்பதிகம் சொற்பொருள் அழகுகள் நிறைந்த பற்பல விளிகளால் இறைவனை விளித்து, அவனிடத்தே சிறப்புடை வேண்டுதல்களை மொழிந்து முடியும் பதினொரு திருப்பாடல்களைக் கொண்டுள்ளது.

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே! (9:1:1)

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா! (9:1:6)

என்றெல்லாம் விளிக்கும் விளிகளில் இறைவனிடத்துத் திருமாளிகைத் தேவரின் ஈடுபாட்டுணர்வு இனிதே விளங்குகின்றது. இத்திருப்பதிகப் பாடல்களில் பெருமளவு இத்தகைய விளிகளாலேயே சிறந்து விளங்கக் காண்கிறோம்.

வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே! (9:1:1)

என்பது போல், 'தொண்டனேன் பணியுமா பணியே' (2), 'கருதுமா கருதே' (3), 'உரைக்குமாறு உரையே' (4), என்றெல்லாம் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வேண்டுகின்ற வேண்டுதல்கள் தேவரின் சித்தாந்த நுட்பத்தினைச் சிறப்புறக் காட்டுகின்றன. 'இறைவா நின்னை அடியேன் விளம்புமாறு என்னுள் நின்று விளம்பியருள்வாய்', 'அடியேன் பணியுமாறு நீயே பணியாய்' என்ற பொருளில் அமைந்த இவ்வேண்டுதல்கள், "அவனருளாலே அவன்தாள் வணங்கி" (சிவபுராணம். 18) எனவரும் மணிவாசகரின் திருவாசகத்தையும்,

அறிவானும் தானே அறிவிப்பான் தானே

அறிவாய் அறிகின்றான் தானே.

(அற்புதத் திருவந்தாதி. 20)

எனவரும் காரைக்கால் அம்மையாரின் அருள் வாசகத்தையும் அடியொற்றி நடப்பனவாம். இறைவன் தன்னை உயிர்களுக்குக் காட்டும் உதவியோடு அவை காணுமாறும் உதவி புரிவானென்ற சித்தாந்தக் கருத்தினை இவ்வேண்டுதல்களிலே உணரலாம். சிவஞானபோதம் பதினோராம் நூற்பாவுரையினுள் இக்கருதித்திற்குத் திருமாளிகைத் தேவரின் இத்திருவிசைப்பாப் பதிகமே எடுத்துக்காட்டப்பட்டுள்ள சிறப்பும் இங்கே எண்ணத்தகும்.

இரண்டாம் திருப்பதிகத்தில் திருமாளிகைத் தேவர் பெரும்பற்றப்புலியூராகிய தில்லையின் பல்வளங்களையும் சொல்வளங்களால் வண்ணித்து, அவ்வூர் அம்பலத்தே ஆடும் பெருமானை அழகுற விளித்து, அவனது ஒவ்வோர் உறுப்பிலும் தம் உள்ளமும் உணர்வும் ஒன்றிய பான்மையை உரைக்கின்றார். இம்முறையில் இறைவனின் அடிமுதல் முடியீறான அழகுகளைப் பாடும் பாதாதிகேசப் பதிகமாய் இஃது அமைந்துள்ளது.

தேர்மலி விழவில் குழலொலி தெருவில்

கூத்தொலி ஏத்தொலி ஓத்தின்

பேரொலி பரந்து கடலொலி மலியப்

பொலிதரு பெரும்பற்றப் புலியூர்.

(9:2:4)

என்பதுபோல் இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முதலிரண்டு அடிகளிலும் தில்லைப்பதியின் பொலிவுகள் திருமாளிகைத் தேலரால் பாடப் பெறுகின்றன.

சிரம்புரை முடிவா னவர்அடி முறையால்

இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா!

(9:2:3)

என்றவாறு இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களின் மூன்றாமடிகளிலும் அம்பலக் கூத்தனாகிய ஆடவல்லானை அணுகி நின்று விளிக்கின்றார் ஆசிரியர். இறுதியாக,

மயர்அறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே -

வடிகளென் மனத்துவைத் தருளே

(9:2:1)

என்ற முறையில் பாக்களின் நான்காமடிகளில் இறைவனின் அடிமுதல் முடியீறான உறுப்புக்களை வரிசையிற் கூறி, அவற்றிலே ஒன்றியடங்கிய தமது உள்ளத்தின் ஈடுபாட்டினை அறிவித்து முடிக்கின்றார்.

அடுத்துத் தில்லை ஆடவல்லானிடம் அன்புற்று மயங்கிய மங்கையொருத்தியின் நிலைகளை அவனுடைய செவிலித்தாய் எடுத்துரைக்கும் முறையில் தேவர் தம் மூன்றாம் திருப்பதிகத்தைப் பாடியுள்ளார். இதில் இறைவன் மேல் காதலுற்ற அக்காதலி, அவனைப் பல பெயர்களால் விளித்துப் புலம்பும் கூற்றக்களை யெல்லாம் அத்தாய் எடுத்துக்கூறி இரங்குகின்றாளாகக் காண்கிறோம். ஆக, காதலியின் நிலையில் திருமாளிகைத்தேவர் இறைவனை ஏத்துகின்ற பதிகமாய் இஃது அமைந்துள்ளது.

'காடாடு பல்கணம் சூழக் கேழல்

கடும்பின் நெடும்பகல் கான்நடந்த

வேடா! மகேந்திர வெற்பா! என்னும்;

வினையேன் மடந்தை விம்மா வெருவும்;

'சேடா!' என்னும்,' செல்வர் மூவாயிரர்'

செழுஞ்சோதி அந்தணர் செங்கை தொழும்

'கோடா!' என்னும், 'குணக்குன்றே!' என்னும்

குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே (9:3:2)

என்ற பாடலை இப்பதிகத்திற்கோர் எடுத்துக்காட்டாகக் காணலாம்.

நான்காம் திருப்பதிகத்தில் தில்லைப் பெருமானிடமும் அவனுடைய அடியாரிடமும் அன்பு செய்யாதவரின் இழிவைப் பேசுகின்ற திருமாளிகைத் தேவர், தம் கண்கள் அவர்களைக் காணாவென்றும், தம் வாய் அவர்களோடே பேசாதென்றும் கூறுகின்றார்.

சிறப்புடை அடியார் தில்லைச்
செம்பொன்அம் பலவற் காளாம்
உறைப்புடை அடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்; வாய்
பேசாதுஅப் போய்களோடே (9:4:11)

எனவரும் பாடல் இப்பதிகத்திற்கோர் எடுத்துக்காட்டாகும்.

## பணிவொடு பகரும் பான்மை

இவ்வாறெல்லாம் நான்கு திருப்பதிகங்களை நயமுறப் பாடியுள்ள திருமாளிகைத்தேவர் பாட்டுடைத் தலைவனாகிய இறைவனின் பெருமைக்கு முன் தம் பாடல்களைச் சிறுமையுடையனவாகப் பனிவொடு பகரும் பான்மையை இங்கே விதந்தெடுத்துப் பாராட்டலாம் :

சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட
செல்வசிற் றம்பலக் கூத்தா!
பூமலர் அடிக்கீழ்ப் புராண பூதங்கள்
பொறுப்பவர்என் புன்சொலின் பொருளே (9:2:11)

என்று பதிகத்தின் முடிப்பாக வருகின்ற அடிகளில், இறைவனின் அரிய பெருமைகளைப் பாடிய தம் எளிய மொழிகளை, அவனும் அவனுடைய பூத கணங்களும் பொறுப்பரெனப் புகலும் நலம் சிறப்போடே போற்றத்தகுவதாம்.

## திருமாளிகைத் தேவர் காலம்

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில் அமைந்த, 'நீறணிபவளக்குன்றம்' (9:1:6) என்னும் அழகிய தொடரே தஞ்சை இராசராசேச்சுரமென்னும் பெரிய கோயிலை எடுப்பித்த முதலாம் இராசராசச் சோழனால் (கி.பி. 985-1014), அக்கோயில் பணிகளுக்கென்று அமர்த்தப்பெற்ற தளிச்சேரிப் பெண்டுகளில் ஒருத்தியின் பெயராகக் கல்வெட்டொன்றிலே (தெ.இ.க.2:66) காணப்படுவதால், இவர் காலம் பத்து அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கருதப் பெறுகின்றது.

# திருக்கடைக் காப்பு

**பேரறிஞர். வா.கோ. கிருட்டிணமூர்த்தி**

தேவாரப் பதிகங்கள் திருக்கடைக்காப்புச் சாத்தியவை எனப் பெரியபுராணம் வாயிலாக அறிகிறோம். திருக்கடைக்காப்பு என்பது பாடினோர் பெயரும், ஓதுவோர் பெறும் பலனும் கூறும் பதிக இறுதிப்பாடல் எனப் பெரியபுராண உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். திருஞானசம்பந்தர் பதிகங்களில் ஆணையிட்ட-ருளுதல் முதலாகத் திருப்பதிகத்தின் பெருமையை விளக்குதல் முனைந்து தோன்றுமாதலால் அவரது தேவாரம் "திருக்கடைக் காப்பு" என்றே குறிப்பிடப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது (ஏழாந்திருமுறை, முன்னுரை பக் ix, தருமையாதீன வெளியீடு, 1964)

திருஞான சம்பந்தர் தம் பதிகங்களில் இருபதிற்கும், சுந்தரர் தம் பதிகங்களில் நான்கிற்கும், திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் ஒன்றிற்கும் திருக்கடைக்காப்புச் சாத்தியுள்ளது பற்றிச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறியுள்ளார். பாடினோர் பெயரும் ஓதுவோர் பெயரும் பலனும் கூறும் பதிக இறுதிப் பாடல் திருக்கடைக்காப்பு எனக் கொண்டால், திருஞானசம்பந்தர் பாடிய அனைத்துப் பதிகங்களும், சுந்தரரின் பதிகங்களில் ஓரிரண்டு தவிர மற்றவையும் திருக்கடைக்காப்புச் சாத்தவில்லை என எண்ண வேண்டியுள்ளது. சுந்தரரின் திருப்பாலாச்சிராமத்துப் பதிகத்திலும் அப்பரின் திருமறைக்காட்டுப் பதிகத்திலும் பாடினோர் பெயரும் ஓதுவோர் பெயரும் பலனும் கூறப்படவில்லை. ஆயினும் அவை திருக்கடைக்காப்புச் சாத்தியவை எனச் சேக்கிழாரால் கூறப்பட்டுள்ளது. இப்பதிகங்களின் இறுதிப் பாடல் பாடிய பின்பு இறையருள் கிட்டியதால் அவ்வருளே ஓதுவோர் பெறும் பலனுமாகும் என்றும், இதுவே திருக்கடைக்காப்பு என்றும் சேக்கிழாரின் கூற்றுக்கு தேவார, பெரியபுராண உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனார். இதனடிப்படையில் நோக்கும் போது எப்பதிகங்கள் பாட இறையருள் கிட்டியதோ அப்பதிகங்களின் இறுதிப் பாடல் திருக்கடைக்காப்பு எனக் குறித்திருக்கக்கூடும் என்று எண்ண வேண்டியுள்ளது.

திருக்கடைக்காப்பு என்பதன் விளக்கங்களைத் தொகுத்துக் காணும் போது அது,

1. பாடினோர் பெயரும் ஓதுவோர் பெயரும் பலனும் கூறும் பதிக இறுதிப் பாடல்.

2. ஆணையிட்டுக் கூறல் கொண்ட பதிகப்பாடல்

3. இறைவன் அருள்கிட்டுமாறு பாடிய பதிகப்பாடல் அல்லது முன்பாகக் கிட்டிய அருளைக் கூறிப் பாடிய பாடல் என்றவா றெல்லாம் கொள்ளப்பட்டிருப்பதை அறிகிறோம்.

திருக்கடைக்காப்பு பற்றிய இவ்விளக்கங்களையும் திருமுறைகளினின்று கிடைக்கும் அகச் சான்றுகளையும் ஆய்ந்து திருக்கடைக்காப்பு என்பது யாது என்றறிய முயலுவோம்.

**1. பாடினோர் பெயரும் ஓதுவோர் பெயரும் பலனும்:**

திருஞான சம்பந்தர் பதிகங்களனைத்தும், சுந்தரர் பதிகங்களில் ஓரிரண்டு தவிர்த்து மற்றவையும் இவ்விளக்கப்படி திருக்கடைக்காப்புச் சாத்தியவையாகின்றன என்று முன்னர்க் கூறினோம். ஆயின், திருஞானசம்பந்தரின் தேவாரம் திருக்கடைக்காப்பு என்று கூறப்பட்டதே தவிர, சுந்தரர் தேவாரம் அவ்வாறு கூறப்படவில்லை. ஆயினும், எப்பதிகத்திலும் தம் பெயர் வைத்தும் ஓதுவோர் பெறும் பலனும் கூறாத திருநாவுக்கரசரின் திருமறைக் காட்டுப் பதிகம் திருக்கடைக்காப்புச் சாத்தியது எனச் சேக்கிழார் கூறியுள்ளார். (திருநா.பு., 268 : 4; திருஞா.பு., 582:3) அதே போல் சுந்தரரின் "வைத்தனன் தமக்கே" எனத் தொடங்கும் திருப்பாலாச் சிராமத்துப் பதிகமும் திருக்கடைக்காப்புச் சாத்தியது எனச் சேக்கிழார் கூறியுள்ளார். (ஏயர்கோன் கலிக்.பு., 82:1) இப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு "ஏசினவல்ல" என்றுரைப்ப எனக் கூறப் பட்டுள்ளது. இவ்வரி பதிக இறுதிப்பாடலில் காணப்படினும் அங்குப் பாடினோர் பெயரும் ஓதுவோர் பெயரும் பலனும் கூறப்படாமையால் திருக்கடைக்காப்பு பற்றிய இவ்விளக்கம் எல்லாவிடத்திற்கும் பொருந்தவில்லை என்றறிய முடிகின்றது. தவிர, திருக்கடைக்காப்பு என்பது எப்போதும் பதிக இறுதிப் பாடலாக அமைவதில்லை என்பதும் சேக்கிழார் வாயிலாகவே அறிகிறோம். எடுத்துக்காட்டாக, "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்" எனத் தொடங்கும் கவுணியரின் தில்லைப் பதிகத்தில் "அவர் தொழுதேத்து சிற்றம்பலம்" எனக்கூறித் திருக்கடைக்காப்பு ஏற்றினார் எனச் சேக்கிழார் கூறியுள்ளார். "அவர் தொழுதேத்து சிற்றம்பலம்" எனும் இவ்வரி பதிகத்தின் பத்தாம் பாடலில் உள்ளது. எனவே, திருக்கடைக்காப்புச் சாத்துவது என்பது பதிக

இறுதிப்பாடல் பாடுவதோ, அதனில் பாடினோர் பெயர் ஓதுவோர் பெறும் பலன் இவை கூறுவதோ அல்ல என எண்ண வேண்டியுள்ளது.

**2. ஆணையிட்டுக் கூறல் கொண்ட பதிகம் :**

திருக்கடைக்காப்பு என்பது ஆணையிட்டுக் கூறல் போன்ற செயற்பாடு கொண்ட பதிகப்பாடல் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆயின், அவ்வாறு ஆணையிட்டுக் கூறல் போன்ற செயற்பாடுகள் பற்றி மிகச் சில பதிகப் பாடல்களிலேயே காணப்படுகின்றன. தவிர, இவ்விதச் சிறப்புச் செயற்பாடுகளுள் எதுவும் காணப்படாத பதிகங்களும் திருக்கடைக்காப்புச் சாத்தியவை எனச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். எனவே, திருக்கடைக்காப்பு என்பதன் இவ்விளக்கம் பொருத்தமானது எனக் கொள்ள முடியவில்லை.

**3. பதிகத்தின் இறுதிப் பாடலும் பெறும் பலனும் :**

திருக்கடைக்காப்பு சாத்தினார், போற்றினார், ஏற்றினார், தொகுத்தார், அமைத்தார், பரவினார் என்று பதிகம் பாடினோரின் இச்சைச் செயலாக இதனைச் சேக்கிழார் விளக்கியுள்ளார். திருக்கடைக்காப்பு என்பது கிட்டிய அருள் குறிப்பதாயின் திருக்கடைக்காப்புச் சாத்துவ்து என்பது அவ்வாறு கிட்டிய அருள், எதுவென விளக்கும் பாடல் என்றே பொருள்படும். ஆயின், பெரும்பாலானவிடத்துப் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்திய பின் இறையருள் கிட்டியதாகக் கூறப்பட்டுள்ளதே தவிர, அவ்வருள் யாதெனப் பதிகப்பாடலில் கூறப்படவில்லை. (திருஞா.பு., 175; 319; 366; 582; 980 மற்றும் இவை குறிக்கும் தேவாரப் பாடல்களும் காண்க).

சிலவிடத்துத் தமக்கு முன்பே கிட்டிய அருள் அல்லது கனவில் இறைவன் தோன்றிக் காட்சி கொடுத்தது போன்றவற்றைக் குறித்துத் திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் கூறியுள்ளார். காட்டாக, "அருந்தவத்தீர் என்னை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை பெருமாட்டியுடன் இருந்ததோ" என்றும் "மண்ணில் நல்ல வண்ணம்" எனத் தொடங்கும் திருக்கழுமலப் பதிகத்திலும், தான் தூங்கக் கனவில் இறைவன் எழுந்திருளியதைத் "துஞ்ச வருவாரும்" எனத் தொடங்கும் திருவாலங்காட்டுப் பதிகத்திலும் ஞானசம்பந்தர் கூறியுள்ளார். இவை முறையே பதிகத்தின் இரண்டாம் பாடலிலும், ஏழாம் பாடலிலும் வைக்கப்பட்டது மட்டுமல்லாது, இப்பதிகங்களின் இறுதிப்பாடல்களில் பாடினோர் பெயரும்

ஓதுவோர் பெறும் பலனும் கூறப்பட்டுள்ளன. எனவே, தன்னிச்சைச் செயற்பாடாகிய "திருக்கடைக்காப்புச் சாத்துதல்" என்பதும் பதிகத்தில் கூறப்படாத பதிகம்பாடிய பின் கிட்டிய அருள் பற்றிக் கூறுவது என்பதும் வெவ்வேறானவை என எண்ணவேண்டியுள்ளது. தவிர, பதிகம் பாடத் தமக்குக் கிட்டிய அருள் அப்பதிகத்தை ஓதுவோர்க்கும் கிடைக்கும்; இதுவே திருக்கடைக்காப்பு என அப்பதிகம் பாடியோரே கூறியிருப்பின் அவரது வாய்மை, இறையருள் பெறக்கூடிய தகுதி, முதலியன கருதித் திருக்கடைக்காப்புப் பற்றிய இவ்விளக்கம் ஏற்கக் கூடியதாக அமையும். பதிகம் பாடி அருள் பெற்ற பெரியோர் அவ்வாறு கூறாதிருக்க மற்றோர் கூறும் இவ்விளக்கம் ஏற்கக் கூடியதாக அமையவில்லை.

எனவே, திருக்கடைக்காப்பு என்றது இம்மூன்று விளக்கங்களில் எதனையும் குறிப்பதாகத் தோன்றவில்லை.

## திருக்கடைக்காப்பு என்பது யாது?

திருக்கடைக்காப்பு எனும் இச்சொல் முதன் முதலாகப் பெரியபுராணத்தில் கூறப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இச்சொல் தேவார மூவர் காலத்தே வழங்கியதற்குச் சான்றெதுவும் நமக்குக் கிட்டவில்லை. தேவார மூவர் செய்ததோர் செயற்பாடு குறித்துச் சேக்கிழார் இச்சொல்லை ஆக்கியிருக்கக்கூடும் என்று எண்ண இடமுள்ளது. எனவே, சேக்கிழார் இச்சொல்லை எப்பொருளில் அல்லது எச்செயற்பாடு குறித்துப் பயின்றிருக் கிறார் எனக் காண்போம்

சேக்கிழாரின் சில பாடல்களில் திருக்கடைக்காப்பு என்பது தேவாரப் பதிகங்களில் எப்பாடலில் வைக்கப்பட்டது என்பதும், அவ்வாறு சாத்தப்பட்ட திருக்கடைக்காப்பு எத்தன்மையை வெளிக்காட்டி நிற்கின்றது என்ற விளக்கமும் கூறப்பட்டுள்ளன. அவற்றை முதலில் காண்போம்.

1. பதிகத்தின் எப்பாடலில் திருக்கடைக்காப்பு சாத்தப்பட்டது என்பது குறிக்கும் சேக்கிழார் பாடல் வரிகள்

அ. திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தி
(திருஞா.பு., 80:1)

ஆ. சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக்காப்புத்தன்னில்
(திருஞா.பு., 319:2)

இ. பன்னுமறையாம் பதிகம் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தி (திருஞா.பு., 319:1)

ஈ. திருப்பதிகம் மேவு திருக்கடைக்காப்புத்தன்னில்

(மேவு = அடைத்து நிற்கின்ற, இறுதியாய் நிற்கின்ற) (திருஞா.பு., 353:1)

உ. செஞ்சொல் மலர்ந்த திருப்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி

(திருஞா. பு., 558 : 1)

ஊ. பதிகப்பாட்டான பத்தும் பாடல் நிரம்பியபின்..........

நீடுதிருக்கடைக்காப்பில் அரிது வேண்டி நின்றெடுக்க

(திருஞா. பு., 582 : 1-3)

இவ்வரிகளினின்று பதிகம் பாடியபின் திருக்கடைக்காப்பு சாத்தப்பட்டது என்றறியலாம். ஆயின், திருக்கடைக்காப்பு என்பது பதிக இறுதிப்பாடல் என்று பொருள்படக் கூறப்பட வில்லை. திருக்கடைக்காப்பு பதிக இறுதிப்பாடல் பாடும்போதோ அவ்விறுதிப்பாடல் முடிந்த பின்போ சாத்தப்பட்டிருக்குக் கூடும் எனத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், திருக்கடைக்காப்பு சாத்துவது, போற்றுவது, தொகுப்பது, ஏற்றுவது என்றவாறு கூறப்பட்டிருப்பதால், அது பதிகப்பாடல் அன்று என்றும் பதிகப் பாடலில் (பாடல் வரியில்) செய்யக்கூடிய ஓர் செயற்பாடு என்றும் அறிக.

இதன் விளக்கம் இக்கட்டுரையின் பிற்பகுதிகளில் காணலாம். அதன் முன் பதிகத்தின் இறுதிப்பாடலல்லாத மற்றப் பாடல்களில் திருக்கடைக்காப்பு சாத்தியிருப்பது பற்றி விளக்கும் சேக்கிழார் பாடல் வரிகளைக் காண்போம்.

அ. சீரினில் திகழ்ந்த பாட்டில் திருக்கடைக்காப்புப் பற்றி (திருஞா.பு., 123:1)

ஆ. சீரின் மல்கிய திருப்பதிகத்தினில் திருக்கடைக்காப் போற்றி (திருஞா.பு., 955:1)

இ) பதிகத்திற் பரவிய பாட்டொன்றில்......................

அவர் தொழுதேத்து சிற்றம்பலம் எனக்கூறி

இன்னதன்மையில்......... திருக்கடைக்காப்பேற்றி

(பரவிய = கூறப்பட்ட, காணப்படும்)

(திருஞா.பு., 174 -175)

மேற்குறிப்பிட்ட பாடல் வரிகளில் பதிக இறுதிப் பாடலல்லாத பதிகப்பாடல் ஒன்றிலும் திருக்கடைக்காப்புச் சாத்தப்படும் என உணர்த்தியிருப்பது காண்க.

மேற்கூறிய இரு விளக்கங்களையும் தொகுத்துக் காணும்போது, திருக்கடைக்காப்புச் சாத்துவது என்பது பதிக இறுதிப்பாடல் உட்பட ஏதாவது ஒரு பாடலில் செயப்படும் செயற்பாடு என்றறியலாம். இச்செயற்பாடு யாது என்பதறிய இச்செயற்பாடு எவ்வாறு செய்யப்பட்டது என்பதனை முதலில் அறிதல் நலம். இவ்விளக்கமும் சேக்கிழார் வாயிலாகவே நாம் பெற முடிகின்றது.

திருஞானசம்பந்தர் புராணத்தின் சில பாடல்களில் திருக்கடைக்காப்பு எவ்வாறு சாத்தப்பட்டதெனச் சேக்கிழார் பெருமான் விளக்கியுள்ளார். அவற்றை இங்குக் காண்போம்.

அ. "சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னில்

நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளியுள்குவார் தம்

பேரிடர் கெடுதற்காணை நம" தெனும் பெருமை வைத்தார்

(திருஞா.பு., 115:2 - 4)

"நாரியோர் பாகர் வைகும்.........................நம" தென்று கூறி, அவ்வரிகளுக்குத் திருக்கடைக்காப்புச் சாத்தினார். எனவே, திருக்கடைக்காப்புச் சாத்துதல் எனும் செயற்பாடு இவ்வரிகள் கூறிச் செய்யப்பட்டது என்றறிக. திருக்கடைக் காப்புச் சர்த்தப்பட்ட இவ்வரிகள் பதிக இறுதிப்பாடலான பதினோராம் பர்டலில் உள்ளன.

ஆ. "ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்" என்றெடுத்து
ஆர்வத்தால்,

பாடினார்; பின்னும் அப்பதிகத்திற் பரவிய
பாட்டொன்றில், நீடு

வாழ் தில்லை நான்மறையோர் தமைக்கண்ட அந்நிலை
யெல்லாம்.

கூறுமாறு கோத்து "அவர் தொழுதேத்து சிற்றம்பலம்" எனக் கூறினார்.

(திருஞா.பு., 174:1 - 4)

"ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர்" என்று தொடங்கும் பதிகம் பாடி முடித்தபின், அப்பதிகத்தில்

கூறப்பட்டுள்ள பாட்டொன்றில் "அவர் தொழுதேத்து சிற்றம்பலம்" எனும் வரி கூறி, அவ்வாறு கூறும் போது நீடு தில்லை வாழ் நான்மறையோர் தமக்குச் சிவகணமாய்த் தோன்றக் கண்ட நிலையினை விளக்கிக் கோத்து, (கற்பனையாகச் சேர்த்து) அத்தகைய நான்மறையோர் தொழுதேத்து சிற்றம்பலம் என்று முடித்த பாடலுக்குத் திருக்கடைக்காப்பு ஏற்றினார்.

(தொடரும்)

# தமிழர் தம் ஆங்கிலச் சார்பு - வேரும் விழுதும்

பேரறிஞர் க. முத்தையா

## இந்திய மறுமலர்ச்சி :

பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியாவில் ஒரு பெரும் உருமாற்றத்தைக் கொண்டு வர உதவிய ஒரு தனி நிகழ்வைத் தெரிவு செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்படின், மற்ற எந்த நிகழ்வையும் விடச் சிறிதும் தயக்கமின்றி ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தைச் சுட்டிக் காட்டலாம். கல்வித் துறையில் ஏற்பட்ட மாபெரும் மாற்றங்கள் அரசியல், சமூக, பண்பாட்டுத் துறைகளுக்குப் புதிய விழிப்புணர்வையும், புத்துணர்ச்சியையும் கொடுத்தன. புதிய சிந்தனைகள் பலவற்றால் உந்தப்பட்ட இந்தியர்கள் தங்களையும் தங்கள் சமூகத்தையும் ஒரு தனி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிப் பார்த்தனர். அம் மதிப்பீடு “இந்திய மறுமலர்ச்சி” என்று வரலாற்று ஆய்வாளர்களால் வருணிக்கப் பெறுகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை நோக்கும் பொழுது, அரசியல் நிலையிலான விடுதலைப் போராட்டம் தொடங்குவதற்கு முன்னரே இந்தியப் பண்பாடு பற்றிய விழிப்புணர்வும், இந்தியப் பாரம்பரியத்தின் புத்துயிர்ப்புத் தேவை பற்றிய உணர்வும் ஏற்பட்டதென்பது, அக்காலங்களில் ஏற்படுத்தப்பட்ட சமூக இயக்கங்களால் தெரிய வருகிறது. இவ்வியக்கங்கள் சமூகம், பண்பாடு தொடர்பான மறு ஆய்வுகளை முன் வைத்தன. மொழித்தளத்தில் இவை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு இந்திய மொழிகளை மக்கள் தொடர்பிற்கான வன்மையான - முழுமையான சாதனங்களாக ஆக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தன. பண்பாட்டுப் பாரம்பரியமும், இன, மொழித் தனித்துவங்களும் அழியாத முறையில், தத்தம் மொழிகளின் தளத்தில் உறுதியாக நின்று கொண்டு, புதிய அரசியல் இலட்சியங்களுக்காகப் போராடுவதற்கும், அப்போராட்ட வெற்றிகளை நுகர்வதற்கும் மொழிவழிப் புத்துயிர்ப்பு உதவும் என நம்பப்பட்டது. இவ்வாறு

மொழிகளின் தளத்தில் உருவான மறுமலர்ச்சி அரசியலை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.

## தமிழக மறுமலர்ச்சி :

தனித்தனிக் குழுக்களாக இயங்கி வந்த வெவ்வேறு இனங்களுடன் தமிழர்களையும் ஒன்றிணைத்த பெருமை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உண்டு. ஒருமுகப்படுத்தப்பட்ட ஆங்கில ஆட்சி நிருவாக முறைமை தமிழரிடையே "குழு உணர்வை" (Team Sprit) ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர்த் தமிழகம் என்ற நிலப்பரப்பு இருந்தது. தமிழ் மொழி பேசும் மக்கட் கூட்டத்தினர் இருந்தனர். ஆனால் தமிழர்கள் அனைவரும் ஒரே குழுமத்தினர் என்றவுணர்வு மேலோங்கவில்லை. இத்தகைய குழு உணர்வு மேலோங்காமைக் குரிய காரணங்களில் தலையாயது, தமிழகம் என்ற நிலப்பரப்பு அரசியல் அடிப்படையிலான ஒன்றிணைப்பைப் பெறாது இருந்ததேயாகும். படையாட்சி அரசுகள், பாளையப்பட்டு அரசுகள், குறுநில மன்னர் அரசுகள் என்று ஆட்சி முறைமை பலவாறாகப் பிரிந்து கிடந்தது. இத்தகு ஆட்சிகள் அந்தந்த வட்டாரத்தின், தன்மைக்கேற்பவும், எங்கோ ஓரிடத்தில் குவிமுகப்படுத்தப்பட்ட பேராட்சியின் தன்மைக் கேற்பவும் செயல்பட்டு வந்தன. இதனால் மொழிவழிப்பட்ட இன உணர்வை விட, நிலவழிப்பட்ட அரசியல் உணர்வே மேலோங்கி வளர்ந்தது. அழிக்கப்படுவது 'தமிழினம்' என்பதைவிட அழிவிற்குள்ளாவது 'அயலரசு' என்ற உணர்வின் வெளிப்பாட்டை ஆங்கிலேயர் வரவுக்கு முன்னர்த் தமிழகத்தில் நடைபெற்ற போர்கள் சுட்டி நிற்கும் .தமிழர்கள் அரசியல் நிலையில் தங்களுக்குள்ள பிரிவினைகளை மறந்து ஒரே ஆட்சிப் பரப்பில் வாழுபவர்கள் என்ற உணர்வை ஆங்கில ஆட்சி முறையே ஏற்படுத்திற்று.

தமிழின் மறுமலர்ச்சி ஆங்கிலேயரின் அறிமுகத்தால் உருப்பெற்றதை அறிஞர் வையாபுரிப்பிள்ளை பின்வருமாறு விளக்குகிறார். "கட்டுக்கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்று புதிய நெறிகளில் செல்வதற்கு நமது கலைப் பண்பாடுகளினின்றும் முற்றும் வேறுபட்ட ஒரு கலைப் பண்பாட்டின் தூண்டுதல் அவசியமாய் இருந்தது. ஆங்கிலேயரது கூட்டுறவினால் இத் தூண்டுதல் நமக்குக் கிடைத்தது; புதிய விஞ்ஞான அறிவு சிறிது சிறிதாகப் புகுந்து தமிழுலகை உள்ளும் புறமும் புதைத்திருந்த இருட்படலத்தைக் கீறி நீக்குவதாயிற்று".

தமிழர்கள் தங்கள் மொழியினையே தமது தனித்துவத்தின் சின்னமாகக் கொள்ளும் போக்கும் தமிழ் மொழியினையே போராட்டத்திற்கான கருவியாகப் பயன்படுத்தும் போக்கும் இந்த நூற்றாண்டின் முதல் பத்துகளில் உறுதியாகச் செயல்பட்டன. இப்போக்கு வளர்ந்ததற்கான ஏதுக்களில் பின்வருபவை சுட்டத் தகுந்தன.

ஆங்கிலேயர்கள் தம் நிருவாகச் செம்மைக்காக ஏற்படுத்தப்பட்ட சென்னைமாகாணப் புவியியல் அமைப்பும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் தமிழர்களுக்கு இந்தியப் பெருநிலப்பரப்பில் மொழிவழிப்பட்ட இனத்தனித்துவ உணர்வை ஏற்படுத்தின. அதே போல் அந்நியப்பட்ட ஓர் ஆட்சிமுறையின் கீழ்த் தமிழரல்லாதோருடன் இணைந்து வாழ நேரிட்ட வாழ்க்கை முறையும் மொழித் தனித்துவ உணர்வை மேலோங்கச் செய்தது. ஆயினும், இத்தகைய தனித்துவ உணர்வுக்கான அடிப்படையான உந்துதலைக் கொடுத்த பெருமை கிறித்துவப் பாதிரிமார்களின் தமிழ்மொழி, பண்பாடு பற்றிய தமிழ்மேன்மைக் கருத்துகளையே சாரும்.

## கிறித்துவப் பாதிரிமார்களின் கருத்துகள் :

கால்டுவெல் பாதிரியாரால் 1856-இல் எழுதப்பட்ட திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (**Comparative Grammar of Dravidian Languages**) என்ற நூல் தமிழர்களுக்குத் தங்கள் மொழிபற்றிய விழிப்புணர்வுக்குத் தேவையான உந்துதலைக் கொடுத்தது. கால்டுவெல் இந்த நூலில் இந்தியாவில் பேசப்பட்டு வந்த பல மொழிகளிடையே 'திராவிட மொழிக் குடும்பம்' தனி நிலையான அடிப்படையை உடையது என்றும், திருந்திய மொழியாக உள்ளது என்றும் பண்டைத் தமிழ்மக்கள் சமற்கிருதச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தவில்லை; அக்காலத் தமிழ் தூய்மையுடைதாக இருந்தது என்றும்; தமிழ் சமற்கிருதத்தின் உதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றலுடையது என்றும் விளக்கிச் செல்கிறார். கால்டுவெல் தந்த இவ்விளக்கங்கள் தமிழர்களுக்குத் தங்கள் மொழி பற்றிய புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதே போல் கில்பர்ட்டு சிலேட்டர் எழுதிய 'இந்திய நாகரிகத்தில் திராவிடக் கூறுகள்' என்ற நூல் தமிழர்களுக்குத் தங்கள் பண்பாட்டின் மீது எழுச்சியை ஏற்படுத்தியது.

தமிழர்களின் தனித்துவம் காக்கப்பட வேண்டும் என்ற

எண்ணப் போக்கிற்குச் 'சைவசித்தாந்தம்' பற்றிய கருத்துகளும் கூடுதல் வலிமையைக் கொடுத்தன. மொழியடிப்படையிலான தன்னுணர்விற்குக் கால்டுவெலின் ஒப்பிலக்கணம் எவ்வாறு வழிகோலியதோ அதேபோல் சமய அடிப்படையிலான தன்னுணர்விற்குப் போப் ஐயரின் சைவசித்தாந்தம் பற்றிய கருத்துகள் அடிப்படையான உந்துதலைக் கொடுத்தன. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் அந்நூலிற்கான முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "சைவ சித்தாந்தம் என்பது இந்தியச் சமயங்கள் எல்லாவற்றிலும் விரிவானதும், செல்வாக்குத் தாக்கமுடையதுமாகும். அது தென்னிந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழர்களுக்கும் உரிய சமயமாகும்."

இவ்வாறு, பல்வேறு காரணங்களால் உந்தப்பட்ட தமிழர்கள், தங்களைத் தனிமொழி, பண்பாட்டுச் சமயக்குழுவினர் என்ற வகையில் தனித்துவத்திற்கான இயக்கங்களைத் தோற்றுவித்தனர். தமிழர்கள் தங்களுக்கான இயக்கங்களைத் தோற்றுவித்துக் கொள்ளும் காலமாகத் தமிழக வரலாற்றில் கிபி. 1916 என்ற ஆண்டுக்காலமே தென்படுகிறது. ஏனெனில், இக்காலத்தில் தான் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் எதிர்ப்புணர்வு அரசியலாக்கப்பட்டது. திராவிடர் கருத்து நிலை எழுந்தது. மறைமலை அடிகளாரின் தனித் தமிழ் இயக்கம், பெரியாரின் நீதிக்கட்சி, தன்மான் இயக்கம், பகுத்தறிவு இயக்கம் ஆகியவை தமிழ்மொழி மற்றும் தமிழினம் தழுவிய இயக்கங்கள். எனவே, இக்காலத்தைத் தமிழக மறுமலர்ச்சிக் காலமாகக் கொள்ளலாம்.

## திராவிட இயக்கமும் தமிழும் :

பார்ப்பனர்களால் சமூகமட்டத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டும், தொழில்துறையில் பின்னிறுத்தப்பட்டும் வந்த பார்ப்பனரல்லா தாரை ஆரியப் பண்பாட்டு மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கும் முயற்சியில் இவ்வியக்கத்தினர் ஈடுபட்டனர். இம் முயற்சி திராவிட இயக்கமாகத் தோற்றம் கண்டது. தங்கள் தனித்துவத்தைக் காப்பதற்கான இவ்வியக்கத்தின் முயற்சி அரசியல் முதல் மொழிவரையிலான எல்லாத்துறைகளிலும் செயல்பட்டது. தமிழர்களிடையே இருந்த பல்வேறு சமய, சமூகப் பிரிவுகளை மறந்து தமிழர்களாக ஒருங்கிணைவதற்குத் தமிழிலக்கியப் பாரம்பரியத்தினை இவ்வியக்கம் பயன்படுத்தியது. மொழியை

அரசியல் நிலையில் பேணுவதற்கான முயற்சியும் இவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வியக்கம் தமிழினது சிறப்பையும் நாத்திகத்தையும் பேசுவதாக அமைந்தது. இவ்வியக்கத்தின் தமிழ்மொழி பற்றிய அணுகுமுறை குறித்து ம.பொ.சிவஞானம் பின்வருமாறு திறனாய்வு செய்கிறார். "தமிழ் நாட்டில் காங்கிரசுக்குப் புறம்பாக நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கம் திராவிடர்கழகம் என்னும் பெயர்களில் இயங்கி வந்த அமைப்புகள் தமிழ் மொழியின் வளர்ச்சியில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை; சமற்கிருத வெறுப்பும் இந்தி எதிர்ப்பும் தாம் தமிழ்மொழியை வளர்ப்பதற்கான வழிகள் என்ற தவறான எண்ணம் தமிழ் மக்களிடையே குறிப்பாகத் தமிழ்ப் புலவர்களிடையே பரப்பப்பட்டு வந்தது. மேற்சொன்ன மூன்று இயக்கங்களும் ஆக்கவழியில் தமிழ்மொழிக்குப் பணிபுரிவதில் அக்கறை காட்டவில்லை."

கட்சி வேறுபாடு காரணமாகத் தோன்றிய கருத்து வேறுபாட்டால் ம.பொ. சிவஞானம் இவ்வாறு கருதினார் என்று எண்ணத் தோன்றினாலும், இவ்வியக்கத் தலைவர்களின் எழுத்துகளும், எண்ணங்களும் மேற்குறித்த செய்தியை உறுதி செய்கின்றன. பெரியார் ஈ.வே. ராமசாமி "தாய்ப்பால்பைத்தியம்" என்ற தலைப்பிட்டுத் தமது 'விடுதலை' இதழில் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை எதிர்த்து நீண்ட கட்டுரையொன்று எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் தாய்மொழிப்பற்று என்பது அறிஞர்கள் வெறுக்கத்தக்க ஒருவகைப் பைத்தியம் என்றும், வீட்டு மொழியாகக் கூட ஆங்கிலத்தை ஏற்றால் தான் வளர முடியும் என்றும் விளக்கிச் செல்கிறார். தமிழை ஆதரித்து வளர்க்காததோடு. மட்டுமன்றி ஆங்கிலத்தை ஏற்கச் சொல்லி பல்வேறு கட்டுரைகளிலும் மேடைப் பேச்சுகளிலும் பெரியார் வலியுறுத்தியுள்ளார்.

ஆங்கில ஏற்பைப்பற்றிச் சொல்லும் போது இவ்வியக்கத்தின் மற்றொரு தலைவரான அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தைப் பற்றியும் சொல்லுதல் வேண்டும். "இன்றைய தினம் முதற்கொண்டு சர்க்கார் உத்தரவுகளிலும் மற்றவைகளிலும் நாம் கையெழுத்துப் போடும் போது தமிழில் தான் போட வேண்டும் என்ற உறுதியோடு வந்தேன். மிக வேகமாக நான்கு காகிதங்களில் தமிழில் கையெழுத்துப் போட்டேன். ஐந்தாவது காகிதம் வரும் போது என்னையுமறியாமலே ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டேன். வெட்கமாகக்

கூட இருந்தது. அதன் பிறகு மறுபடியும் தமிழில் போட ஆரம்பித்தேன் ஒவ்வொரு நாளும் நான் எடுக்கிற அந்த உறுதியிடலிலிருந்து அடிக்கடி தவறிப்போகிற நிலை உருவாவதற்குக் காரணம் ஆங்கிலமொழியோடு நமக்கு ஏற்பட்டிருக்கின்ற தொடர்பு அந்த அளவிற்கு இருப்பது தான். விரைவிலேயே அதிலிருந்து விடுபடமுடியவில்லை என்பதை நான் வெட்கப்படாமல் ஒப்புக் கொள்கிறேன்." என்ற கருத்து தமிழர்களின் உள்ளத்தில் ஊறிப்போன ஆங்கிலத்தின் இறுக்கத்தைக் காட்டுவதாக உள்ளது.

## தனித் தமிழ் இயக்கம் :

தமிழர்களின் தனித்துவம் பற்றிய கிறித்துவப் பாதிரிமார்களின் தமிழ்மொழி, தமிழினம் பற்றிய விளக்கங்கள் வடமொழி மற்றும் வடவ்ரை இகழும் எண்ணப்போக்கு உருவாகவும் செவ்விய அடித்தளத்தை அமைத்துச் சென்றன. மொழியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட தனித் தமிழ் இயக்கம் பார்ப்பனர் எதிர்ப்பியக்கமாகவும் செயல்பட்டன. இவ்வியக்கங்கள் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதைவிட, ஆங்கிலமொழியை அகற்றுவதை விட சமற்கிருதத்தை நீக்குவதிலும் பார்ப்பனீயத்தை இகழுவதிலும்தான் கருத்தைச் செலுத்தின. இவைகளினூடாக ஆங்கிலத்தின் அரவணைப்பும் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர் களிடம் இருந்துள்ளது.

தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த மறைமலை அடிகளாரின் ஆங்கிலமொழி மற்றும் ஆங்கிலேயர் ஆட்சி பற்றிய எண்ணங்கள் பின்வருமாறு :

"காந்தியடிகள் கதர் உடுக்கச் சொல்கிறார் அது நம் நாட்டளவில் அன்பு காட்டுவதாகும். நாம் அப்படிச் செய்தால் பயிர்த் தொழில் புரியாது கைத்தொழிலையே நம்பி ஆடைகள் நெய்தனுப்பும் ஆங்கில நன்மக்கள் வாழ்வதெப்படி? ஆகவே, ஆங்கிலேயர் செய்யும் ஆடைகளை நாம் வாங்குதல் வேண்டும். மேலும் முடிவற்ற சாதி வித்தியாசங்களும், இயைபுபடுத்த முடியாத இன, மத வேறுபாடுகளும் கொண்ட இந்திய மக்கள் யாவர் மீதும் பாரபட்சமின்றி இறைவனால் பணிக்கப் பெற்ற ஆங்கிலேயர் அரசாங்கம் மட்டுமே மிகச்சிறந்த ஒரேயொரு அரசாங்கம் என்பதைத் தமிழ் மக்கள் குறித்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடும் மறைமலை அடிகள் இரண்டாம்

உலகப்போரின் போது ஆங்கிலேயர் வெற்றிபெற வழிபாடு செய்துள்ளார். தமது நாட்குறிப்பு முழுவதையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவர் தமது தனித்தமிழ் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளில் பெரும்பாலானவற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

இவ்வாறாக, தமிழகத்தில் தோன்றிய இவ்விரு மறுமலர்ச்சி இயக்கங்களின் செயற்பாட்டை நோக்கும் பொழுது பின்வரும் கருத்துகள் பெறப்படுகின்றன.

1. இவ்விரு இயக்கங்களும் பார்ப்பனர் மேலாக்கத்திலிருந்து தமிழரைக் காப்பதையும், வடமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காப்பதையும் இறுதி இலட்சியங்களாகக் கொண்டு செயல்பட்டுள்ளன.

2. இவ்விரு இயக்கங்களின் முக்கிய நோக்கமாக அமைந்தது சமூக விடுதலையும் மொழியின் தூய்மையைப் பேணுதலு மாகும்

3. ஆங்கில ஆட்சியையும் ஆங்கிலமொழியையும் இவ்விரு இயக்கங்கள் எதிர்க்கவில்லை, மாறாக வெளிப்படையாக அவற்றை ஆதரித்துள்ளன.

4. மொழி வளர்ச்சி என்ற கோணத்தில் இவ்விரு இயக்கங்களும் தமிழ்மொழியின் காப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளன. தமிழின் வளர்ச்சிக்கு இவர்களின் ஆங்கிலப் பற்றுதல் தடையாக இருந்துள்ளது.

## மறுமலர்ச்சிக் காலத் தமிழின் நிலை :

தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில் தமிழின் நிலையிலும் அதன் மதிப்பிலும் பெரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. அக்காலத்து ஆட்சியாளர்களின் ஆதரவு தமிழுக்கு இல்லை என்பது மட்டுமின்றித் தமிழியக்கத் தலைவர்களின் எண்ணங்களும் எழுத்துக்களும் தமிழின் பின்னடைவிற்கும் புறக்கணிப்பிற்கும் கூடுதல் காரணங்களாக இருந்துள்ளன. தமிழ் மறுமலர்ச்சிக் காலத்திலும் அதற்குப் பின்னும் தமிழ்மொழி பேசும் மக்கள் கூட்டத்தினரின் ஒட்டு மொத்தச் சமூக அமைப்பின் பல்வேறு தளங்களிலும் தமிழ்மொழி தன் பயன்பாட்டை இழந்து விட்டதைப் பின்வரும் செய்திகள் உறுதிப்படுத்தும்.

தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில் வேறு எந்த மாநிலத்தையும் விடத் தமிழகம் ஆங்கிலத்தின் வளர்ப்புப் பண்ணையாக இருந்துள்ளது. உலக அரங்கில் இருந்தியாவின் சார்பாகப் பங்கு பெறுவதில் மற்ற மாநிலத்தவர்களை விடத் தமிழர்கள் முன்னணியில் இருந்துள்ளனர். செனிவா உலகச்சங்கத்தில் திரு.சீனிவாச சாஸ்திரி அங்கம் வகித்ததற்கும் தமிழகத்தில் நிலவிய ஆங்கிலமொழிச் செல்வாக்கும், அதன்வழியாகப் பெற்ற ஆங்கிலமொழிப் புலமையுமே காரணங்களாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் பிறமொழிக்கூட்டத்தினர் தங்கள் தாய்மொழிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் பயன்பாட்டு நிலையில் செயல்படுத்தியும் வந்த காலத்தில் தமிழர்கள் ஏனைய இந்தியப் பகுதியினரை விட ஆங்கில மொழிப் பற்றாளர்களாக இருந்துள்ளதைக் காந்தியடிகள் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

"சென்னையில் தாய்மொழியை உபயோகிப்பதற்கான இயக்கம் அண்மையில்தான் ஆரம்பமாகிறது. இந்த விசயத்தில் தமிழர்களை விடத் தெலுங்கர்கள் இன்னும் விழிப்புடன் இருக்கிறார்கள். தமிழர்கள் ஆங்கிலத்தின் செல்வாக்கிற்கே பெரிதும் ஆட்பட்டிருப்பதால் தமிழைப் போதனா மொழியாக்குவதற்குரிய ஊக்கம் இல்லாமற் போய்விட்டது. தெலுங்கர்கள் தமிழர்களை விட அதிகமாகத் தங்கள் தாய்மொழியை உபயோகிக்கிறார்கள்."

ஆங்கில மொழியோடு ஆங்கிலப் பண்பாட்டைப் பின்பற்றுவதில் மற்ற மாநிலத்தவர்களை விடத் தமிழர்கள் முன்னணியில் இருந்துள்ளதை ஓர் ஐரோப்பியரே எடுத்துக் காட்டுகிறார். "கல்கத்தாவையும் பம்பாயையும் விட சென்னை யிலேயே தமிழர்களில் பெரும்பாலோர் மரப்பந்து (Criket), வளைகோற் பந்து (Hockey) வரிப்பந்து (Tennis) உதைப்பந்து (Foot Ball) ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். ஆங்கிலேயரின் கோரிக்கைகளை மிகவும் உயர்வாகக் கருதித் தமிழர்கள் பின்பற்றுபின்றனர்".

(தொடரும்)

# நிறுவனர் வாழ்த்து

விற்பனராம் சான்றோர்கள் வீற்றிருந்து தமிழாய்ந்த
கூடல் தன்னில்

கற்பனைக்கோர் கம்பனுடன் கடலனைய
வள்ளுவனும் இல்லை யந்தோ

நற்றமிழின் நலங்காக்க நான்காண்பேன்
சங்கமெனச் சமைத்த மேலோன்

கற்பகமாம் பொன்பாண்டித் துரைச்சாமித்
தேவர்கழல் சென்னி சூடுப்பாம்.

— முனைவர் அ. தட்சிணாமூர்த்தி,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக் குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்து கொள்ள அறிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனைகள்

1. தலை முதல் கால் வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.

❑ **இரத்தவகை** ❑ **சீரம் கிரியேட்டினைன்**
❑ **சர்க்கரை அளவு** ❑ **கொலஸ்ட்ரால் அளவு**

## கூடுதல் பலன்கள்

- இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு
- இலவசமாக இரண்டுமுறை தலை சிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

## இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு : பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்று நோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50/- செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு :

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

MMHRC

Only Private Hospital in South TamilNadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No. 490/19/6/95)

லேக்ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.

Ph : 42481 (5 lines) 535977 (3 lines)

**உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்**

✓ பாண்டியன் கணினி மறுதோன்றி அச்சகம், மதுரை-1. © 31927